புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

**No.1/TD/EDP/PARIVAHAN-SEVA** புதுச்சேரி, 22.07.2016

செய்திக்குறிப்பு

**புதுச்சேரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பழகுனர் உரிமம் பெற இணையதளம் மூலம் விண்ணப்பம் செய்யும் முறை 27.07.2016 முதல் அறிமுகம்**

புதுச்சேரி போக்குவரத்துத் துறையின் அனைத்து சேவைகளும் கணிணிமயமாக்கப் பட்டுள்ளன. கணிணிமயமாககப்பட்டுள்ள போக்குவரத்துத் துறையின் அனைத்து சேவைகளும் மேம்படுத்தப்பட்ட வாகன் 4.0 மற்றும் சாரதி 4.0 (Vahan 4.0/Sarathi 4.0) மென்பொருட்கள் மூலம் இணையதளம் வாயிலாக முழுமையாக பொது மக்களுக்கு வழங்கப்பட உள்ளன. இதன் தொடக்கமாக இணைய தளம் மூலம் விண்ணப்பம் செய்து பழகுனர் உரிமம் மற்றும் ஓட்டுனர் உரிமம் பெறுவதற்கான நடைமுறை முறையே கடந்த 22.01.2016 மற்றும் 07.03.2016 தேதிகளில் உழவர்கரை வட்டார போக்குவரத்து நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக வரும் 27.07.2016 முதல் புதுச்சேரி வட்டார போக்குவரத்து அலுவலகத்திலும் இணையதளம் மூலம் மட்டுமே பழகுனர் உரிமம் மற்றும் அவ்வாறு பழகுனர் உரிமம் பெற்றவர்கள், தமது ஓட்டுனர் உரிமம் பெறுவதற்கும் இணையதளம் வாயிலாக விண்ணப்பம் செய்யும் நடைமுறை தொடங்கப்படுகிறது; இதன் பின்னர் இணையதளம் மூலமாக விண்ணப்பம் செய்யும் முறை கட்டாயமாக்கப்படுகிறது. 27.07.2016 முதல் பழகுனர் உரிமம் பெற நேரடியாக அலுவலகத்தில் விண்ணப்பம் செயயும் முறை நிறுத்தப்படுகிறது.

இணையதளம் வாயிலாக பழகுனர் உரிமம் மற்றும் ஓட்டுனர் உரிமம் பெற விண்ணப்பம் செய்பவர்கள். பழகுனர் உரிமம் மற்றும் ஓட்டுனர் உரிமம் பெறுவதற்கான தேர்வுக்கு வரும் பொழுது தாம் இணையதளம் வாயிலாக செய்த விண்ணப்பத்தை பதிவிரக்கம் செய்து அத்துடன் அசல் சான்றிதழ்களையும் அவற்றின் நகல்களையும் கொண்டுவருதல் வேண்டும். சான்றிதழ்கள் சரிபார்த்தபின் உரிய தேர்வுக்கு அனுமதிக்கப்படுவார்கள். தேர்வின் முடிவுக்கு ஏற்ப உரிமம் வழங்கப்படும் அல்லது மறுக்கப்படும். படிப்படியாக போக்குவரத்துத் துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் இச்சேவை விரைவில் விரிவுப்படுத்தப்பட உள்ளது என்பது பொதுமக்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்படுகிறது.

...2/-

இணையதளம் வாயிலாக போக்குவரத்துத் துறையின் சேவைகளை பெறுவதற்கு கீழ் கண்ட வகையில் இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பம் செய்யலாம்.

(i) ஒருவர் தாமாக கணிணியின் மூலம் விண்ணப்பம் செய்யலாம்.
(ii) பள்ளி மற்றும் கல்லூரி மூலமாக விண்ணப்பம் செய்யலாம்.
(iii) மோட்டார் வாகன ஓட்டுனர் பயிற்சி பள்ளிகளின் மூலமாக விண்ணப்பம் செய்யலாம்.
(iv) பொது சேவை மையம் (Common Service Centre) மூலமாக விண்ணப்பம் செய்யலாம்.

புதுச்சேரியிலுள்ள பள்ளி மற்றும் கல்லூரிகள் புதுச்சேரியில் உள்ள ஓட்டுனர் பயிற்சி பள்ளிகள் ஆகியன போக்குவரத்துத் துறையினை அணுகி விண்ணப்பம் செய்து தமக்குறிய இணையதள பயன்பாட்டு முகவரி மற்றும் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தற்போது புதுச்சேரியில் போக்குவரத்துத் தலைமை அலுவலகம், சாரத்தில் உள்ள உழவர்கரை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், திருபுவனை மற்றும் காட்டுக்குப்பத்தில் உள்ள வட்டாரப் போக்குவரத்து துணை அலுவலகங்கள் ஆகியவற்றில் தனித்தனி சர்வர்களில் ஓட்டுனர் உரிமம் தொடர்பான விபரங்கள் உள்ளன. எனவே அந்தந்த அலுவலகம் சென்று தொடர்புடைய பணிகள் செய்ய வேண்டிய நிலை உள்ளது. ஓட்டுனர் உரிமம் ஓட்டுனர் உரிமம் தொடர்பான அனைத்து விபரங்களும் தேசிய மென்பொருள் காப்பகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதும் ஓட்டுனர் உரிமத்தில் புதுப்பித்தல், முகவரி மாற்றம், திருத்தம் செய்தல் போன்ற பணிகள் துரிதமாக நடைபெறும்.

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்